## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும்

வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு “சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பிரகாரம் அட்டுறுச் செலவுகள் 5 விடயங்களுக்கான பெறுமதி ரூபா 2,519,794 மற்றும் ரூபா 406,790 ஆன பெற வேண்டிய வருமான விடயங்கள் 03 இன் பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பெறுமதிகள் 2020 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | நியம இலக்கம் 02 இன் பிரகாரம் ரூபா 32,383,494 ஆன வட்டி வருமானம் மற்றும் ரூபா 25,802 ஆன நிதிச் செலவுகள் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படாமையுடன், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் சம்பந்தமாக கொடுக்கப்பட வேண்டிய ரூபா 1,644,344 ஆனது முதலீட்டு நடவடிக்கைகளாக காட்டப்படாது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 1,150,386 ஆன பணிக்கொடைக் கொடுப்பனவுகள் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | குறுங்கால வைப்புக்களிற்காகப் பெறப்பட்ட முழு வட்டி வருமானம் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள குறுங்கால வைப்புக்களின் அதிகரிப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 12,121,012 ஆன பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், வேலை முடிவுறாதமையால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டமை சரியானது. பணிக்கொடைக் கொடுப்பனவு செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் எதிர்காலத்தில் சரியாக காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நியமம் 7 இன் 65 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக பூரணமாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட ஆனால் தற்போது உபயோகிக்கப்படுகின்ற கிரயம் ரூபா 196 மில்லியன் ஆன சொத்துக்கள் மேற்கூறப்பட்ட சொத்துக்களின் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், அச்சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையுடன் இது சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் குறிப்பு இலக்கம் 09 கட்டிடம், பொறிகள் மற்றும் உபகரணப் பட்டியலில் 2018.12.31 கிரய மீதிகளுக்கான சொத்துக்களின் வேறுபாட்டுப் பெறுமதி சீராக்கப்பட்டு அதற்கான தேய்மானச் சீராக்கம் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த கிரயம் மற்றும் திரண்ட தேய்வு ஒதுக்கம் பதிவேடுகளில் சீராக்கப்பட்டுத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகாரம் பெறப்படாது கடந்த ஆண்டில் நிதிக் கூற்றுக்களின் நீக்கப்பட்ட மொழிப் பிரிவின் மற்றும் பட்டப்பின்படிப்புக் கல்விப் பிரிவின் பெறவேண்டிய ரூபா 12,195,650 ஆனது மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படாத காரணத்தினால் சொத்துக்களின் மதிப்பீடு அப் பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இவ்வாறு நீக்கப்பட்ட பெற வேண்டிய மீதிகள் தொடர்பாக ஆளுநர் சபையின் விசேட கவனம் கோரப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட முடியாத மீதிகள் திட்டவட்டமான அங்கீகாரத்தின் அடிப்படையில் மட்டுமே நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட வேறு நுகர்வுப் பொருட்களின் பெறுமதியான ரூபா 216,197 | கையிலுள்ள மீதி காட்டப்பட்டு ஏனைய சேமிப்புக்கள் மீதி சீராக்கப்பட்டபோது நுகர் | கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல் செலவு மீதியொன்று குறைக்கப்பட்டிருந்தமை காரணமாக வழங்கல் பொருட்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டமையுடன் தனிப்பட்ட நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 545,645 ஆனது பெற வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பொருட்களின் எதிர்மறைப் பெறுமானமாக கணக்கிடப்பட்டது. அவை பரீட்சிக்கப்பட்டுத் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சிற்றுண்டிச் சாலை உரிமையாளருக்கு மற்றும் ஒரு சமிஞ்சை பரிமாற்றக் கோபுரத்திற்கு உரிய செலுத்த வேண்டியதாகக் குறிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 150,000 மற்றும் ரூபா 397,645 ஆன பெறுமதிகள் எதிர்காலத்தில் பெற வேண்டிய வருமானமாக இனங்காண்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | நிலையான சொத்துக்களின் தேய்மானம் கணக்கிடும் போது 03 விதமான நிலையான சொத்துக்களின் கிரயம் ரூபா 2,311,550 அதிகமாகவும் 5 விதமான நிலையான சொத்துக்களின் கிரயம் ரூபா 14,852,647 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிறுவனத்தின் மோட்டார் வாகனங்களுக்கான தேய்வு ஒதுக்கம் ரூபா 8.6 மில்லியன் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இவ்வேறுபாடு 2020 கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் கிரயம், அவற்றின் தேய்மான ஒதுக்கம் கணக்கிடும் போது சரியாகச் செய்ய வேண்டியமை. |
| (ஈ) | அட்டுறுச் செலவுக் கண்கில் கடந்த சில வருடங்களாக தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத ரூபா 1,994,507 ஆன மீதிகளுக்குரிய மேலும் பொறுப்புக்கள் இல்லாதிருந்ததால் வருமானத்திற்கு மாற்றவோ, அல்லது நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்படுவதற்கோ ஆன நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | வருடத்திற்கும் அதிகமான காலமாக அட்டுறு செலவினமாக காட்டப்பட்டிருந்த ரூபா 1,994,507 ஆன தொகை சம்பந்தமான செலவுகள் பரிசோதிக்கப்பட்டு 2020 வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சீராக்கத்திற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகள் இனங் காணப்பட்டு தீர்க்கப்படு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட பெறவேண்டிய மிகுதிகளின் பெறுமதி ரூபா 7,922,875 ஆகும். | பட்டப்பின் படிப்பு பிரிவிற்கு உரித்தான கற்கை நெறிகளுக்குப் பதிவுக்கட்டணம் செலுத்திய பின்னர் முழுக் கற்கை நெறிக்குமான கட்டணம் பல வருடங்களுக்கு நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வருமானமாக காட்டப்பட்டுள்ளது. பதிவு செய்த போதிலும், இக்கற்கை நெறிகளில் பங்குபற்றாமல் விடுவதால் பெறவேண்டிய பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட்டு நீக்கப்படுகின்றன. | பழைய மீதிகள் தீர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வருடம் 1 இற்கும் 5 இற்கும் இடையிலான செலுத்த வேண்டிய மிகுதிகளின் பெறுமதி ரூபா 12,812,322 என்பதுடன் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மிகுதி ரூபா 17.180,549 ஆகும். | இச்செலுத்த வேண்டிய மிகுதியாகக்காட்டப்பட்ட தொகை மதியுரைச் சேவைப் பரீட்சைகள், சேவையின் ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்காக அரசின் நிறுவனங்கள் மூலம் பெறப்படும் பணமாகும். இந்நிகழ்ச்சித் திட்டங்களிடையே தற்போது நடாத்திச் செல்லப்படுகின்ற, முடிவுற்ற மற்றும் இன்னும் ஆரம்பிக்கப்படாத நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய மிகுதிகளாக காட்டப்பட்டுள்ள தொகைகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. | செலுத்த வேண்டிய மிகுதிகளை தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**1.7 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1982 இன் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உருவாக்கல் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கங்களாக அன்றி மற்றும் நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரித்தற்ற 37 வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் நடப்பு வருடத்திற்குள் நடாத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பரீட்சைகள் மூலம் மதிப்பிடல் செயன்முறை அமைச்சரவையினால் பரீட்சைத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் அதிருப்தியின் அடிப்படையில் அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சரின் அமப/18/2011/828/043 ஆம் இலக்க மற்றும் 2019.02.28 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்திற்கான 2019.05.21 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழி பரீட்சைகளை நடாத்துவதற்காக மீண்டும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங் களுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2010 இன் யூலை மாதம் 09 ஆந் திகதிய CA/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதிச் செயலக அலுவலகத்தின் | வெளிநாடுகளுக்குச் செல்லும் அரச உத்தியோகத்தர் நாட்டிற்கு வந்த பின்னர் சுற்றறிக்கையின் படிவத்தின் பிரகாரம் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட | வெளிநாடுகளுக்குச் சென்ற அனைத்து உத்தியோகத்தர்களும் அறிக்கையை கையளித்தமையுடன் அவ் அறிக்கைகள் அரச நிர்வாக அமைச்சிற்கு | கோவைகளில் உள்ளடக்கப் பட்டிராமையால் அவற்றை உள்ளடக்கு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கைக் கடிதம். | வேண்டுமாயினும், ஆனால் மீளாய்வாண்டின் போது வெளிநாடுகளுக்குச் சென்ற நிறுவகத்தின் 07 உத்தியோகத்தர்களினால் அவ்வேற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டது. | வேண்டியமை. |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | இடைக்காலக் கட்டுநிதிக்கான காரியம் நிறைவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின்போது 44 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 2,498,440 ஆன முற்பணத் தொகை தீர்க்கப்படுவதற்கு 19 நாட்கள் தொடக்கம் 119 நாட்களுக்கிடையிலான காலதாமதம் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் முற்பணம் பெறப்பட்டமைக்கான காரியம் நிறைவடைந்தவுடன் தீர்க்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் உத்தியோகத்தர் களுக்கு அறியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 2016 பெப்பரவரி 12 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பட்டப்பின்படிப்புக் கற்கைப் பிரிவின் ஆரம்ப பெற வேண்டிய மிகுதிகள் ரூபா 330,000 மற்றும் முந்திய வருடங்களின் மொழிப் பிரிவின் பெற வேண்டியவைகளாக கூடுதலாக மதிப்பிடப்பட்ட ரூபா 478,011 என்பன ஆளுநர் சபையின் அனுமதியின்றி நீக்கப்பட்டிருந்தது. | இவ்வாறு நீக்கப்பட்ட பெற வேண்டிய மிகுதிகள் தொடர்பான ஆளுநர் சபையின் விசேட கவனம் கோரப்பட்டு அனுமதி பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 2014/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2019 ஆம் வருடத்திற்காக பொருட் கணிப்பீட்டு அறிக்கை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகம் அதனைத் தயாரித்து இருந்தமை 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதியே ஆகும். | பொருட் கணிப்பீட்டு அறிக்கையில் உள்ளடங்குவது 2019.12.31 திகதியில் நிறுவகத்தில் காணப்படும் சொத்துக்கள் மற்றும் பொருட்களின் அளவு மதிப்பாகும். நிறுவகத்திற்குள் தொடர்ந்து பேணப்பட்டு வரும் ஆ பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெறுமதிகள் சரியானவை ஆகும். பேணப்பட வேண்டிய அறிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். | |
| (உ) | 2003 ஒக்டோபர் 28 ஆந் திகதிய PED/17 ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்கு முன்பாக பொது வியாபார பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட வேண்டுமாயினும், ஆனால் மாதிரிச் சோதனைகளின் பிரகாரம் 07 சந்தர்ப்பங்களில் 07 உத்தியோகத்தர்களினது வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக குறிப்பிட்ட அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பங்களில் PED/17 சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றுவதற்கான தேவையான முறைமை தயாரிக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 31,228,496 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படுவதற்கு அல்லது தயாரிக்கப்பட்ட பதிவேடு நாளதுவரையாக்கப் படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்காய்வுச் சந்தர்ப்பத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் காணப்பட்ட நாளதுவரையாக்க லுக்கான குறைபாடுகள் சரி செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவு | ஊக்கப்படிகளுக்கான நடைமுறைகள் தொடர்பாக திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்யிருந்த போதிலும், அவ்வாறு அனுமதி பெறப்படாது 2017 ஆம் வருடத்தின் போது ரூபா 6,041,471 உம் 2018 ஆம் வருடத்தின் போது 7,469,067 உம் மற்றும் 2019 ஆம் வருடத்தில் | நிறுவகத்தை உருவாக்கிய சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் இந்நிறுவகம் தொடர்பாக ஊக்கப் படிகள் செலுத்துவதற்காக நிதி அமைச்சின் சிபார்சு மற்றும் பொது நிர்வாக விடயப்பரப்பு | படிகள் செலுத்துதல் சம்பந்தமாக திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | ரூபா 2,380,148 உம் ஆக நிறுவகத்தின் 95 பதவியணியினருக்கு ஊக்கப்படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரின் அனுமதியின் கீழ் நிறுவகத்திற்காக செய்யப்படுகின்ற மதியுரைச் சேவைகளின் மற்றும் பரீட்சை நடவடிக்கைகளின் பெறப்படுகின்ற பணத்தில் நிறுவகத்தின் ஊழியருக்காகத் திரட்டப்பட்ட பணத்தில் 10 சதவீதமான பணம் ஊக்கப்படிகளாக நிறுவகத்தின் பதவியணியினருக் கிடையே பங்கிடப்பட்டு வழங்கப்படுகின்றது. |

## 1.9 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற வங்கிக் கணக்குகள் இரண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டபோது வருடம் பூராக மாதத்திற்கு சராசரியாக ரூபா இருபத்தைந்து மில்லியனுக்கும் அதிகமான மிகுதிகள் பேணப்பட்டு வருவதாகவும் மற்றும் வருட இறுதியில் ரூபா 22,918,072 ஆன மிகுதி அவதானிக்கப்பட்டதுடன் நடைமுறைக் கணக்கில் பாரிய அளவிலான தொகை தக்க வைக்கப்படுவதை விட கோரும் போது செலுத்தப்படும் வைப்புக்களில் (call Deposits) பணத்தை முதலீடு செய்து வருமானம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை. | நிறுவகத்தின் வங்கிக் கணக்குகளில் பேணப்படுகின்ற பண மிகுதிகள் தினசரி மற்றும் மாதாந்தம் தீர்க்கப்பட வேண்டிய கடன்களுடன் தொடர்புடைய பணம் என்பதால் இரண்டு வங்கிக் கணக்குகளில் உள்ள பண மிகுதிகளும் இம்முறையில் பராமரிக்கப்படுகின்றன. | பணம் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக விவேகத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,817,697 மிகை என்பதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 16,428,481 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 36,246,178 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 9,575,449 ஆல் குறைவடைந்தமை, அரசின் மானியம் அதிகரித்தமை மற்றும் பிரயாணச் செலவு மற்றும் ஏனைய படிகள் மற்றும் வெளிநாட்டு பயிற்சி செலவுகள் குறைவடைந்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் முன்னேற்ற பகுப்பாய்வு

வாடகை வருமானம் மற்றும் மொழி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வருமானம் என்பன 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது முறையே நூற்றுக்கு 240 மற்றும் நூற்றுக்கு 836 இனால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவகத்தின் 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அமப/13/0237/523/001 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இரண்டாம் நிலைக்கல்வி ஊழியர்களுக்கு நூற்றுக்கு 50 வீதமான இரண்டாம் நிலைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவு சம்பந்தமாக 2014 நவம்பர் 14 ஆந் திகதிய பொது வணிகச் செயற்குழுவின் கட்டளைக்கு ஏற்ப மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்தபட்ச மணித்தியாலங்களின் அளவு 45 மணித்தியாலங்கள் ஆன எல்லையினை எட்ட வேண்டுமென்று காட்டப்பட்டுள்ளது. இக்கட்டளைக்கு முரணாக நிறுவகத்திற்கு 2015 யூலை தொடக்கம் 2018 திசெம்பர் 31 | அதனால் வார இறுதி நாட்களில் கடமை புரிவதற்காக வழங்கப்படுகின்ற விரிவுரைக்கட்டணங்களின் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டமை யுடன் எந்த உத்தியோகத்தரும் வார இறுதி நாட்களில் நடாத்தப்படுகின்ற பயிற்சி நெறிகளுக்கு சம்பந்தப்படுவதற்குப் பயன்படுத்த முடியாமல் இருப்பதுடன் முற்றுமுழுதாக வெளிவாரியான வளவாளர்களை நம்ப வேண்டியிருக்கும். அப்படியானால் அது நேரடியாகப் பயிற்சிக் கற்றை நெறிகளின் தரத்தில் குறைவு ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்ற காரணத்தால் அறவீடுகள் ஐந்து வேலை | பொது வணிகச் செயற்குழுவின் கட்டளைக்கு முரணாக செயற் பட்டிருப்பின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| வரையிலான அறவிடப்பட வேண்டிய ரூபா 9,152,375 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நாட்களுக்குள் வரையறுக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) 2018 ஆம் வருடத்தில் ‘‘சங்தரனி’’ ஆய்வு நிலையம் ரூபா 3,443,672 செலவிடப்பட்டு நவீன மயமாக்கப்பட்டதுடன் ஆய்வு நிலையத்தின் தளபாடப் பொருட்கள், கணனி மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் உபயோகிக்கப்படாது விளைவற்றதாக பேணப்பட்டமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | ஆய்வு நிலையத்தின் வளங்கள் உபயோகிக்கப்படாது விளைவற்றதாக பேணப்படுவதாக கூறப்படும் அவதானிப்புப் பிழையானது என்பதுடன் நிறுவகத்தின் ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடும்போது பாவனைக்கான குறைபாடுகள் காணப்பட்டமையால் பாவனையை அதிகப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் முறையாகப் பயன்படுத்தப் படுவதை உறுதி செய்ய வேண்டியமை. |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கும் போது 2019 ஆம் வருடத்திற்குள் பூரணப்படுத்தப்படாத செயற்பாடுகள் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. மதிப்பிடப்பட்ட செலவுகள் ரூபா 1,896,800 இல் 840 உத்தியோகத்தர்களுக்காக அவ்வவ்போதான 26 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 02 TOT நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ஆனால் 42 உத்தியோகத்தர்களுக்காக குறுகிய காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 02 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | நிறுவகத்தினால் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாமையால் அக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| ii. | ரூபா 1,291,125 ஆக மதிப்பிடப்பட்ட செலவுகளில் 150 உத்தியோகத்தர் களுக்காக 05 சான்றிதழ் கற்கைநெறிகள் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டும் ஆனால் எவ்வித கற்கைநெறிகளும் நடாத்தப்படவில்லை. | நிறுவகத்தினால் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட இக்கற்கைநெறிகளுக்காக போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காமையினால் அக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iii. | ரூபா 400,000 ஆக மதிப்பிடப்பட்ட செலவுகளில் 400 உத்தியோகத்தர் களுக்காக 3 மணித்தியால 4 பொதுக் கருத்தரங்குகள் நடாத்துதவற்கு திட்டமிடப்பட்டிருந்தும் ஆனால் எவ்வித கருத்தரங்குகளும் நடாத்தப்படவில்லை. | 2019 வருடத்திற்குள் 02 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. | கணக்காய்வு வேளையின் போது சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மையுடன் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 165 என்பதுடன் உள்ளபடியான பதவியணியினர் 110 ஆகும். இதன் பிரகாரம் 55 வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | நிறுவகத்தில் காணப்படும் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக ஆளுநர் சபையின் அனுமதியின் கீழ் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படுவதால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதுடன் ஈஸ்டர் தாக்குதல், சனாதிபதித் தேர்தல், மற்றும் நாட்டினுள் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் பராளுமன்றத் தேர்தல் காரணமாக இச்செயன்முறை இற்றை வரையில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 வருடத்திற்காக மீண்டும் | சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டத்தின் பதவிகளில் நூற்றுக்கு 50 வீதத்திற்கு அதிகமானதாகக் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி மற்றும் ஆளுநர் சபையின் அனுமதி பெற்ற பின்னர் நிறுவகத்தின் தற்போது காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான உரிய நடவடிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் வருடத்தின் வருடாந்த அறிக்கை கணக்காய்வுத் தினம் வரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீட்டுச் செலவுகள் உள்ளபடியான செலவுகள், ஒப்பிடப்படும் போது 4 செலவு விடயங்களில் நூற்றுக்கு 11 இலிருந்து நூற்றுக்கு 200 வரையிலான வீச்சிலான முரண்கள் காணப்பட்டதுடன் 4 வருமான விடயங்களின் வருமானத்தில் முரண்கள் நூற்றுக்கு 6 சதவீதத்திலிருந்து நூற்றுக்கு 70 வீதம் வரையான வீச்சில் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் வருடத்தில் சில வருமானத் தலைப்புக்கள் குறைவடைந்தமை மற்றும் சில வருமானத் தலைப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட வருமான அதிகரிப்பைக் காட்டியமையால் 2019 ஆம் வருடத்தில் வருமான மதிப்பீடு திருத்தப்பட்டமையுடன் முழுமையாகப் பார்க்கும் போது வருமான மதிப்பீட்டில் பாரிய வேறுபாட்டைக் கொண்டிருக்கவில்லை. | வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் நோக்கங்களைச் செயற்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

எதிர்பார்க்கப்பட்ட ஆட்சேர்ப்பு செய்யப்படாமை, எதிர்பார்த்த வகையில் வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படாமை போன்ற காரணங்களினால் செலவு விடயங்களின் மதிப்பீடு திருத்தப்பட்டதுடன் செலவுகளை முறையாக முகாமைத்துவம் செய்த காரணத்தால் ஏனைய செலவு விடயங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட செலவுகளில் திருத்தம் செய்யப்பட்டது.